# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC 225/2022 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : இளஞ்செழியன் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : குப்புசாமி | Age | : 63 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 01.03.2024.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி அவர் குடும்ப செலவிற்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும் 12.05.2020 ம் தேதி ரூ.7,50,000/- கடன் பெற்றார். அவர் அதற்காக அன்றைய தேதியிலேயே மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார். (**அந்த கடனுறுதி சீட்டு புத.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அதன் பிறகு எதிரி கடன் தொகை மற்றும் வட்டியை திருப்பி செலுத்தாததால் 06.03.2022 ம் தேதி அவரை சந்தித்து மேற்படி தொகையை வட்டியுடன் செலுத்துமாறு கேட்டதன் அடிப்படையில் எதிரி அவர் கணக்கு வைத்துள்ள ஆடுதுறை கிளை சிட்டி யூனியன் வங்கியின் 04.05.2022 ம் தேதியிட்ட ரூ. 7,50,000/-க்கான காசோலையை

அளித்தார். (**அந்த காசோலை பு.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அந்த காசோலையை நான் கணக்கு வைத்துள்ள ஆடுதுறை கிளை சிட்டி யூனியன் வங்கியில் 04.05.2022 ம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன். ஆனால் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணம் குறிப்பிட்டு 07.05.2022 அன்று திருப்புதல் குறிப்பாணை மூலமாக திருப்பபட்டது. ( **மேற்படி திருப்புதல் குறிப்பாணை பு.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு கடந்த 19.05.2022 அன்று எனது வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். (**அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி அறிவிப்பினை 20.05.2022 ம் தேதி எதிரி பெற்றுக்கொண்டுள்ளார். (**மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி அறிவிப்பிற்கு 21.05.2022 ம் தேதி எதிரி பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு பதில் அறிவிப்பு ஒன்று அனுப்பியுள்ளார். (**மேற்படி பதில் அறிவிப்பு பு.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் மீண்டும் 7.6.2022 ம் தேதி எதிரி Rejoinder மறுப்பு அறிவிப்பு ஒன்று அனுப்பியுள்ளார். (**மேற்படி Rejoinder மறுப்பு அறிவிப்பு பு.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனவே என்னிடம் கடன் பெற்று வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று கருதப்பட்டு எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**